[27th August 1970

THIRU M. RAJAH IYER : We are extremely thankful to the Hon. Minister.

DEPUTY CHAIRMAN : Half an hour will be allotted for this discussion. On what day we will have the discussion will be announced soon.

Free Education Scheme

*12. Q.—THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(*a*) whether the Madras Educational Rules have been revised with a view to enforcing the implementation of Free Education Scheme of the Government ; and

(*b*) if so, the details thereof ?

இலவசக் கல்வித் திட்டம

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு கல்வி—சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) அரசின் இலவசக் கல்வித் திட்டத்தைச் செயல்படுத்தும் நோக்கத்துடன் தமிழ் நாடு கல்வி விதிகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளனவா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) & (இ) : இல்லை. மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்களின் பணி முறைமைகள் குறித்து ஆய்வு செய்ய அமைத்த குழு தொடக்கப்பள்ளி, உயர்நிலைப் பள்ளிகளுக்கான விதிகளையும் ஆணைகளையும் தொகுக்கும் வேலையைச் செய்யும்.

THIRU M. RAJAH IYER : Sir, my question is with reference to the Free Education Scheme and the implementation of the same.

THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN : Sir, that is the question for which I gave the answer.

THIRU M. RAJAH IYER : May I know, Sir, whether any difficulty has been experienced in the matter of implementation of this Free Education policy by certain institutions refusing to implement the policy of the Government and whether the Government, in the course of the last year or two, have felt the need for arming themselves with powers to enforce the Free Education policy of the Government, particularly in Colleges, where one or two recalcitrant managements refuse to implement the Free Education policy, because of which there are clashes between the students and the managements ? May I know whether the Government have felt the need for amending the Madras Educational Rules in this respect ? That is what I just want to know.

27th August 1970]

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : ''சர்வீஸ் கண்டிஷன்'' ஆகியவைகளைக் கவனிப்பதற்கு என்று தற்போது ஒரு குழு அமைத்திருப்பதால், அந்தக் குழு " Rules and orders relating to Elementary and High Schools" ஐ ஆராய்ந்து, மாண்புமிகு உறுப்பினர் கூறுகிற கருத்துக்களை மனதில் கொண்டு, சிபாரிசு செய்தால் அந்த அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வாய்ப்பாக இருக்கும் என்று கூறிக் கொள்கிறேன்.

திரு. எம். ராஜா அய்யர் : அந்தக் குறைபாடுள்ள விதிகளைக் கட்டாயப்படுத்தி அமுலாக்கும்போது, சில நிர்வாகத்தினர் இந்த விதிகளை அமுலாக்கமாட்டோம் என்று சொன்னால், அவர்களைக் கட்டாயப் படுத்தக்கூடிய சட்டபூர்வமான அதிகாரம் 'மெட்ராஸ் எஜுகேஷனல் ரூல்ஸ்''படி இருக்கிறதா என்பதை அரசாங்கம் ஆராய்ந்திருக்கிறதா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் இதற்கொரு ''ஸ்டாசுட்டரி பேசிஸ்'' இல்லாததால்தான், இதை நம்மால் அமுலாக்க முடியவில்லை என்ற சங்கடம் இருப்பதை நாம் பார்க்கிறோம். எனவே அரசாங்கம் இதை ஆராய்ந்து கல்வி சம்பந்தமான எல்லா விதிகளுக்கும் சட்டபூர்வமான ஒரு ஆதாரம் கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : துணைத்தலைவரவர்களே, அதற்காகத்தான் அமைக்கப்பட்டிருக்கும் குழுவின் அறிக்கையை அரசாங்கம் எதிர்பார்க்கிறது. அறிக்கை கிடைத்தபிறகு சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்க என்னென்ன முயற்சிகளைச் செய்யலாம் என்று அரசு ஆராயும்.

Collection of maintenance fees

*13. Q.—THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(*a*) whether the Government have decided to permit managements of aided Secondary Schools to levy Maintenance Fees from students ; and

(*b*) if so, the details thereof ?

பேணுதல் கட்டணம்

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு கல்வி—சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) அரசு மானியம் பெறும் உயர்நிலைப் பள்ளிகளில் மாணவர்களிடமிருந்து பேணுதல் கட்டணங்களை வசூலிக்க அதன் நிர்வாகிகளை அனுமதிக்க அரசு முடிவு செய்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?